தலைப்பு 130 - பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 130 - பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண

சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சு வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	கட்டுமானத்திற்குப் பின்னர் 2024 மார்ச் 14 ஆம் திகதி முதல் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்த காம்பஹா உத்தியோகபூர்வ அலுவலகக் கட்டிடத்தின் கட்டுமானச் செலவான ரூபா 588,332,550 ஆனது கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்கப்படாமல், பூர்த்தி செய்யப்படாத வேலைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டிற்காகவும் இதற்கான ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், சொத்தின் கட்டுமானம் பூர்த்தியாகவில்லை என்பதால், அதனை சொத்துக் கணக்கிற்கு மாற்ற இயலாமைக்கு இதுவே காரணமாகும். இத்தொகையை கணக்கு வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.	ஒரு சொத்தினைப் பயன்படுத்தும் போது, செலவுகள் மூலதனமாக்கப்பட வேண்டும்.
(ii)	அமைச்சிற்குச் சொந்தமான 13 பங்களா வீடுகள் மற்றும் 15 சமிட் வீடுகளின் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியும், 30 பங்களா வீடுகள் மற்றும் 65 சமிட் வீடுகளின் காணிகளின் பெறுமதியும், நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கு	அமைச்சிற்குச் சொந்தமான 32 பங்களா வீடுகளின் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி தற்போது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அவை எதிர்காலத்தில் கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆருக்கம்பே சுற்றுலா பங்களாவும் அதன் காணியும்	அமைச்சின் வசமுள்ள உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியானது நிதி அல்லாத சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட வேண்டும்.

	வைக்கப்படவில்லை. மேலும், உள்நாட்டலுவல்கள் பிரிவிடம் கையளிக்கப்பட்டிருந்த ஆருக்கம்பே சுற்றுலா பங்களாவும் அதன் காணியும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்படவில்லை.	கையகப்படுத்தப்பட்டிருந்தாலும், மதிப்பீட்டுப் பெறுமதிகளைப் பெறுவது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	
(iii)	உள்நாட்டலுவல்கள் பிரிவின் வசமுள்ள 06 வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்படவில்லை.	இது தொடர்பாக குழுவொன்றை நியமிப்பதற்காக, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திடம் இருந்து உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அப் பெயர் பரிந்துரை கிடைத்த பின்னர் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.	வாகனப் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும்.

(ஆ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
வாகன நிரட்படுத்தும் பதிவேடு		
நிதிப் பிரமாணம் 1647(உ) இற்கு அமைவாக வாகனப் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை.	கணக்காய்வுப் பரிந்துரைகளுக்கு அமைய, நிதிப் பிரமாணத் கோவையின் VI ஆவது பட்டோலைக்கு அமைவாக மோட்டார் வாகனப் பதிவேடு ஒன்று பேணப்பட்டு வருகின்றது.	நிதிப் பிரமாணங்களுக்கு அமைய, வாகன நிரட்படுத்துட பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும்.

(இ) கணக்காய்வுக்கான சான்றுகள் இல்லாதிருந்தமை

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா 15,717,369,276 ஆக இருந்த நிதி அல்லாத சொத்துக்களுக்கான விரிவான இணைப்புப் பட்டியல் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	அமைச்சின் 2024 ஆம் ஆண்டின் நிதி அல்லாத சொத்துக்களுக்கான நிலையான சொத்துப் பதிவேடு தயாரிக்கப்பட்டு வருவதால், அது பூர்த்தியானவுடன் அதனை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	கணக்காய்வுக்குத் தேவையான தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன என்பதற்கு,

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அரசாங்கக் கட்டிடங்கள் மற்றும் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் போன்ற சொத்துக்களில் இருந்து ஈட்டப்படும் வாடகை வருமானங்கள், 20.02.01.01 என்ற வருமானக் குறியீட்டு இலக்கத்திற்குக் செலவு வைக்கப்பட வேண்டும். இருப்பினும், அவ்வாறு வாடகைக் வருமானம் பெறப்படும் கட்டிடங்கள் மற்றும் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் எவை என்பது குறித்த தகவல்களை உள்ளடக்கிய முனனர் அடையாளப்படுத்தப்பட்ட தரவு முறைமை ஒன்று இல்லாததால், முழுமையான கட்டிடங்கள் மற்றும் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களின் வாடகைச் சேகரிப்புகள் சரியாகக் கணக்கு வைக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்படவில்லை.	பொது நிர்வாகச் சுற்றறிக்கை 20/2021 மூலம் அரச வருமானம் மதிப்பீடு செய்தல், சேகரித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் அறிக்கையிடுதல் தொடர்பான வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தியுள்ளதுடன், அதற்கமைய 20.02.01.01 என்ற வருமானக் குறியீட்டு இலக்கத்திற்குரிய கட்டிடங்கள் தொடர்பான தகவல்களும், கட்டிடங்கள் மற்றும் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களின் வாடகை மூலம் ஈட்டப்படும் வருமானத்தை மேற்படி வருமானத் தலைப்பிற்கு செலவு வைப்பது தொடர்பாகவும் அமைச்சிற்கு அறிக்கையிடப்படுகிறது.	அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பன அரசாங்கக் கட்டிடங்கள் மற்றும் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் குறித்து முன்னர் அடையாளப்படுத்தப்பட்ட தரவு முறைமை ஒன்றைப் பேணுவதன் மூலம், வருமானம் சரியாகக் குறியீட்டு இலக்கத்திற்குக் வரவு வைக்கப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று அறவிடப்பட வேண்டிய நிலுவையிலுள்ள கட்டிட வாடகை ரூபா 346,512,987 ஆக இருந்ததுடன், இது கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் ரூபா 59,167,654 இனால் அல்லது 21 வீதத்தால் அதிகரித்திருந்தமையால், நிலுவையிலுள்ள வாடகையைச் கால அடிப்படையில் அறவிடுவது பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. இந்த நிலுவை வாடகைத் தொகையில் ரூபா 168,499,955 ஆனது 2021 ஆம்	2025 மார்ச் 31 ஆம் திகதி வரை ரூபா 53,728,880 அறவிடப்பட்டுள்ளது. மேலும், இந்த அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் அரசாங்க விடுதிகள், சுற்றுலா விடுதிகள் மற்றும் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் இருந்து 2025 மார்ச் 31 ஆம் திகதி வரை ரூபா 5,236,525 அறவிடப்பட்டுள்ளது.	உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களின் வாடகையைத் தாமதமின்றி அறவிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் நிலுவை வாடகை அதிகரிப்பதைத் தடுப்பதற்காக விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

ஆண்டிற்கு முன்னர் இருந்தே அறவிடப்பட வேண்டியிருந்தது. மேலும், இந்த நிலுவை வாடகைத் தொகையில் ரூபா 30,383,153 ஆனது இந்த அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் அரசாங்க விடுதிகள், சுற்றுலா விடுதிகள் மற்றும் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. இது தொடர்காக பின்வரும் அவதாணிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.		
(i) 2017-2019 காலப் பகுதியினுள் 122 சந்தர்ப்பங்களில் அமைச்சின் பொது நிர்வாகப் பிரிவின் வசமிருந்த 07 விடுதி மனைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,102,450 வருமானத்தை அறவிடத் தவறியுள்ளது.	2017-2019 காலப் பகுதியினுள் சனாதிபதி செயலகம் மற்றும் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்களின் பெயரில் ஒதுக்கப்பட்ட விடுதி மனைகளில் தங்கியிருந்தவர்களின் தகவல்கள் முறையாகப் பதிவு செய்யப்படாமையின் காரணமாக, அறவிடப்பட வேண்டிய நபர்களை அடையாளம் காண முடியாமல் நிலுவையாக உள்ள வருமான மீதியாகும். இது தொடர்பில் மேலதிகத் தகவல்கள் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.	விடுதி மனைகளைப் பயன்படுத்துவது தொடர்பான முறையான அறிக்கையிடல் ஒன்று பேணப்பட வேண்டும் என்பதுடன், இந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகளைத் தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும்.
(ii) 2015-2018 காலப்பகுதியிலிருந்து நிலுவையில் உள்ள மொத்தம் ரூபா 1,478,227 கொண்ட 19 மீதிகள் உட்பட, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று, 37 முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து ரூபா 2,714,701 நிலுவை வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது.	முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானத்தை அறவிடுவதற்குத் தொடர்ச்சியாகக் கடிதங்கள் மூலமும் தொலைபேசி மூலமும் அறிவிக்கப்பட்டாலும், அதற்கான அவர்களின் பிரதிபலிப்பு மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளது.	நிலுவை வீட்டு வாடகையைச் சம்பளத்திலிருந்து அறவிடக்கூடிய ஒரு முறையை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(iii) 27 சமிட் வீடுகளில் இருந்து 2012 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய அறவிடப்படாமல் நிலுவையிலுள்ள வாடகையான ரூபா 2,158,417 உம், அத்துடன் ஜயவடனகம வீடுகள் 15 இல் இருந்து 2012 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய	சமிட் வீடுகளில் இருந்து 2025 மார்ச் 31 ஆம் திகதி வரையில் ரூபா 137,286 அறவிடப்பட்டுள்ளது. அதற்கமைய, 2012 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய நிலுவைத் தொகையானது ரூபா 2,064,980 ஆகும். ஜயவடனகம வீடுகளில் வசித்துவந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து	உத்தியோகத்தர்களுக்கு வீடுகளை வழங்கும் போது, வாடகை அறவீடு தொடர்பில் எழுத்துமூலமான இணக்கப்பாடு ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன், அதற்கமையச் செயற்பட வேண்டும்.

அறவிடப்படாமல் நிலுவையிலுள்ள வாடகையான ரூபா 8,767,895 உம் இதுவரை அறவிடப்படவில்லை.	அறவிடப்பட வேண்டிய நிலுவை வீட்டு வாடகையை அறவிடுவதற்காக இயன்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்ட பின்னர், அந்த நிலுவைத் தொகையை நிதிப் பிரமாணங்களுக்கு (நி.பி.) அமைய தள்ளுபடி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து அரச நிதித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.	.
(iv) காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு ஒதுக்கப்பட்டிருந்த பங்களா வீடு ஒன்றிலிருந்து 2012 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 6,837,470 இதுவரை அறவிடப்படவில்லை	காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வீட்டு வாடகைத் தொகையை அறவிடுவது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	வீடுகளை வழங்குவது தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் எழுத்துமூலமான ஒப்பந்தம் ஒன்றுக்கு இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(v) 2009-2016 காலப்பகுதியினுள் சனாதிபதிப் பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்காக சனாதிபதி அலுவலகத்திடம் கையளிக்கப்பட்ட 10 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் இருந்து உரிய வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு வீட்டு வாடகை கொடுப்பனவுகளைச் செய்வதாக அறிவித்திருந்த போதிலும், இதுவரை வீட்டு வாடகை செலுத்தப்படவில்லை.	உத்தியோகத்தர்களுக்கு வீடுகளை வழங்கும் போது, வாடகை அறவீடு தொடர்பில் எழுத்துமூலமான இணக்கப்பாடு ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன், அதற்கமையச் செயற்பட வேண்டும

3.2 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	16 மூலதன மற்றும் மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 22,900,000 இற்கான ஏற்பாடுகள் உபயோகிக்கப்படாமல் முழுமையாக எஞ்சியிருந்தன. 36 மூலதன மற்றும் மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 6,647,850,000 இற்கான ஏற்பாடுகளில் ரூபா 5,936,220,685 அதாவது 89 சதவீதத்துக்கும் அதிகமாக எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்காகச் செலவிடப்படாமல்	பணிகளை நிறைவேற்ற முடியாமை, தாமதம், பணிகள் பூர்த்தி செய்யப்படாமை, தேர்தலுடன் தொடர்புடைய செயற்பாடுகள் காரணமாகப் பயிற்சித் திட்டங்களைக் கட்டுப்படுத்தல், செலவுகளைக் கட்டுப்படுத்தல், தேவைகள் ஏற்படாதிருத்தல், அத்தியாவசிய பணிகளுக்கான கொள்வனவுகளை மாத்திரம் மேற்கொள்ளுதல், இராஜாங்க அமைச்சின் பதவிகளை நீக்குதல், அரச கரும மொழிகள் பிரிவானது நீதி மற்றும் தேசிய	நிதிப்பிரமாணம் 50(ii) இற்கு அமைய சரியான செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைத் திட்டமிட்ட விதத்தில் நோக்கங்கொண்ட பணிகளை நிறைவேற்றுவதற்காகச்

	மீதமிருந்தன.	ஒருமைப்பாட்டு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டதன் காரணமாக இறுதி காலாண்டில் ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தாமை, தேசிய வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கைக்கு அமைய, கூட்டங்கள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி அமர்வுகள் போன்றவற்றை இயலுமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இணையவழி முறைமை ஊடாக நடாத்துதல், பல்நோக்கு அபிவிருத்தித் திணைக்களம் கலைக்கப்பட்டமையுடன் அதன் ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டமையால் ஒதுக்கீடுகளின் தேவைப்பாடு குறைந்தமை போன்ற காரணங்களால் ஒதுக்கீடுகள் மீதமடைந்தன.	செலவிட வேண்டும்.
(ஆ)	அமைச்சின் கீழ் உள்ள 05 நிறுவனங்களுக்கு மூலதனச் செலவின விடயம் ஒன்றுக்காக மேலதிக ஒதுக்கீடுகளும் உட்பட வழங்கப்பட்டிருந்த ரூபா 147,500,000 இற்கான ஏற்பாடுகளில் ரூபா 114,170,019 அதாவது 77 வீதமும், அதில் 02 நிறுவனங்களுக்கு மீண்டெழும் செலவின விடயங்கள் 03 இற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 41,000,000 இற்கான ஏற்பாடுகளில் ரூபா 34,399,957 அதாவது 84 சதவீதமும் எதிர்பார்க்கப்பட்ட பணிகளுக்காகச் செலவிடப்படாமல் மீதமிருந்தன.	நிறுவனங்கள் தமது நிதியைப் பயன்படுத்துதல், எதிர்பார்த்தபடி நிதி முன்னேற்றத்தை அடையத் தவறுதல், மூலதனச் செலவுகளுக்கு அமைச்சரின் அனுமதி கிடைக்கப்பெறாமை மற்றும் முற்பணங்களை விடுவிப்பதில் உள்ள கட்டுப்பாடுகள், நாட்டில் நிலவிய மோசமான காலநிலை (அதிக மழை) காரணமாகக் கட்டுமானப் பணிகளை முறையாக மேற்கொள்ள முடியாமை, சம்பளம் மற்றும் ஏனைய தொடர் செலவினங்களுக்காக நிறுவனம் தமது நிதியைப் பயன்படுத்துதல், செலவுக் கட்டுப்பாடு போன்ற காரணங்களால் நிதி ஒதுக்கீடுகள் மீதமடைந்தன.	நிதிப் பிரமாணம் 50(ii) இற்கு அமைய சரியான செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைத் திட்டமிட்ட விதத்தில் நோக்கங்கொண்ட பணிகளை நிறைவேற்றுவதற்காகச் செலவிட வேண்டும்.
(இ)	08 மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவின விடயங்களுக்காக நிதிப் பிரமாணம் 66/69 இற்கு அமைய மாற்றப்பட்டிருந்த மொத்தம் ரூபா 161,951,376 இற்கான ஏற்பாடுகளில் ரூபா 150,421,599 இற்கான ஏற்பாடுகளும், அத்துடன் 2016-2020 காலப்பகுதியில் செயற்படுத்தப்பட்ட “பிபிதெமு பொலன்னறுவை” அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பொறுப்பகளாக் கணக்கு வைக்கப்படாதிருந்த பற்றுச்சீட்டுக்களைத் தீர்ப்பதற்காக மாற்றப்பட்ட ரூபா 124,383,923	ஆண்டின் மூன்றாம் மற்றும் இறுதி காலாண்டுகளில் மேலதிக நேரத்தை மட்டுப்படுத்தல், இராஜாங்க அமைச்சின் பதவிகளை நீக்குதல் மற்றும் ஊழியர்களைக் கலைத்தல் காரணமாகச் செலவுகள் ஏற்படாதிருத்தல், கட்டுமானப் பணிகளை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்ய ஒப்பந்தக்காரர்கள் தவறுதல், கொள்முதல் செயல்முறை முடிந்து உத்தரவு வழங்கப்பட்டிருந்தாலும் கொடுப்பனவுகளுக்கான கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமை,	ஒதுக்கீடுகளை மாற்றம் செய்தல் திட்டமிட்ட விதத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், அந்தத் திட்டங்களின் அடிப்படையில் அவை செலவிடப்பட வேண்டும்.

	மொத்த ஒதுக்கீடும் மீதமிருந்தன.	பிபிதெமு பொலன்னறுவை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கையிருப்பில் உள்ள பற்றுச்சீட்டுக்களைத் தீர்ப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி 2024 திசெம்பர் 31 ஆம் திகதி கிடைத்ததன் பின்னர் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும் கட்டுநிதியின் அளவானது போதுமானதாக இல்லாமை போன்ற காரணங்களால் ஒதுக்கீடுகள் மீதமடைந்தன.	
(ஈ)	05 மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவின விடயங்களுக்கான ஆரம்பச் செலவின மதிப்பீட்டிற்கும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீட்டிற்கும் இடையிலான வேறுபாடானது 142 வீதம் முதல் 374 வீதம் வரையிலான வீச்சுக்குள் காணப்படுமாறு, மொத்தம் ரூபா 56,900,000 ஆக இருந்த ஆரம்பச் செலவின மதிப்பீடு ரூபா 249,955,725 வரை, அதாவது ரூபா 193,055,725 இனால் அதாவது 339 சதவீதத்தால் அதிகரித்திருந்தமையால், மதிப்பீடுகள் தயாரித்தல் சரியாக இடம்பெறவில்லை.	மேலதிக செலவுகளை ஈடுசெய்வதற்காக நி. பி. 66 இன்படி மாற்றல் செய்யப்பட்டமை, ஒதுக்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட ஏற்பாடுகள் அதனுடன் தொடர்புடைய செலவுகளை ஈடு செய்வதற்குப் போதுமானதாக இல்லாமை, ஏற்பாடுகள் போதுமானதாக இல்லாமை மற்றும் ஆரம்பச் செலவின மதிப்பீட்டைக் கடந்து சென்றமை போன்ற காரணங்களால் நி. பி. 66 இன்படி மாற்றல் செய்யல்கள் இடம்பெற்றன.	நிதிப் பிரமாணம் 50(ii) இற்கு அமைய சரியான செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும்.

3.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களுக்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 20,281,657 ஆனது அந்த நிறுவனத்தின் நிதிக்கூற்றுகளில் அறவிடப்பட வேண்டிய மீதியாகக் காண்பிக்கப்பட்டிருந்தாலும், அமைச்சின் நிதிக்கூற்றுகளில் பொறுப்பாக கணக்கு வைக்கப்படவில்லை.	2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் சில பயிற்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வந்த போதிலும், பயிற்ச்சித் திட்டங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு செலவினமும் அன்றைய தினத்தில் தீர்க்கப்பட்டுள்ளது. மேலும், அந்த நிறுவனம் 2025 மே மாதம் 09 ஆம் திகதி அனுப்பிவைத்த 2024 நவம்பர் 01 – 2025 மார்ச் 31 வரையான காலப்பகுதியின் செலவுகள் / பண பெறுவனவுகள் பற்றிய அறிக்கையில், எமது அமைச்சின் பயிற்சித் திட்டங்களுக்காக அந்த நிறுவனத்துக்கு பெறப்பட வேண்டிய தொகை ரூபா 20,219,918 ஆகும்.	எதிர்வரும் ஆண்டில் தீர்ப்பதற்கான பொறுப்புகள் உரியவாறு அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

அவதானிப்புக்கள்		பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணங்காமை		
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை			
XIX ஆம் அத்தியாயத்தின் 1.1 மற்றும் 2.2 ஆம் பிரிவு	பதவிகளுக்காக வீடுகளை நிர்மாணித்து, பட்டியல் இட முடியும் என்பதுடன், 2003 அக்டோபர் 17 ஆந் திகதிய 11/2003 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு அமைய, அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் ஏதாவது அமைச்சுக்கள், திணைக்களங்கள் அல்லது உத்தியோகத்தர்களுக்காகப் பட்டியல் இடப்பட்ட வீடுகள் இல்லாதிருந்த போதிலும், அமைச்சரின் அங்கீகாரத்துடன் 06 பொது வீடுகளும், அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்துடன் 16 பொது வீடுகளும் பட்டியல் இடப்பட்டு வழங்கப்பட்டிருந்தன.	11/2003 ஆம் இலக்க சுற்றறிக்கையானது 2003 ஆம் ஆண்டில் காணப்பட்ட நிலைமை தொடர்பில் விளக்கமளித்துள்ளதுடன், அதற்கமைய அந்த வருடம் வரையில் பட்டியல் இடப்பட்ட வீடுகள் இருக்கவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டின் பின்னர், சேவைத் தேவைகள் மற்றும் விசேடமான காரணங்களைக் கருத்திற் கொண்டு, தாபனக் விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்குஇணங்க உரிய பதவிகளுக்காக இந்த அமைச்சுக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் தாபனக் கோவையின் பகுதி XIX இன் 2.2 ஆம் பிரிவின் பிரகாரம் பட்டியல் இடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.	தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய பதவிகளுக்காக வீடுகளை நிர்மாணித்து பட்டியல் இட முடியுமேயன்றி, வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களைப் பட்டியல் இட முடியாது. எனவே, அதற்கான ஏற்பாடுகளுக்கு அமையச் செயற்பட வேண்டும்.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை			
நிதிப்பிரமாணம் 104	நட்டம் அல்லது சேதம் ஏற்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும்,	முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	வாகன விபத்துக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களுக்கு அமையச் செயற்பட வேண்டும்.

உள்நாட்டலுவல்கள் பிரிவுக்குச் சொந்தமான 07 வாகன விபத்துக்கள் தொடர்பில் அவ்வாறு செயற்படவில்லை.

3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அமைச்சிற்கு வெளியேயுள்ள 52 நிறுவனங்களில் 56 ஆரம்ப விசாரணைகளை நடாத்துவதற்காக 21 அபிவிருத்தி உத்தியோகத்தர்களைப் பெயரிட்டு அனுப்புவதற்கு விசாரணைப் பிரிவு நடவடிக்கை எடுத்திருந்ததுடன், மாதிரிப் பரிசோதனைகளின்படி, 04 நிறுவனங்களில் 04 விசாரணைகளை நடாத்துவதற்காக உகந்த கொடுப்பனவைச் செலுத்துமாறு அறிவித்து பெயரிட்டு அனுப்பப்பட்ட 06 உத்தியோகத்தர்கள் கொடுப்பனவுகளாக ரூபா 530,800 ஐப் பெற்றுக்கொண்டிருந்தனர். நிரந்தரக் கடமையின் கீழ் வராத ஆரம்ப விசாரணையை நடாத்துவதற்காக அரச நிர்வாகச் சுற்றறிக்கை 14/2014 இற்கு அமைய கொடுப்பனவைப் பெற முடியும் என்றபோதிலும், குறித்த சுற்றறிக்கைக்கும் தாபன விதிக் கோவையின் IX அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக, கடமை நேரத்தில் வெளியார் நிறுவனங்களின் விசாரணைகளை நடாத்துவதற்காக வெவ்வேறு சுற்றறிக்கைகள், வெவ்வேறு வீதங்களின்படி கணக்கிட்டு செய்யப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைய கொடுப்பனவுகள் பெறப்பட்டிருந்தன.	சனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், அரச கணக்குகள் பற்றிய குழு, அரச சேவைகள் ஆணைக்குழு, அரச தொழில்முயற்சிகள் பற்றிய குழு மற்றும் ஏனைய நிறுவனங்களில் இருந்து சமர்ப்பிக்கப்படும் ஆரம்ப விசாரணைகளுக்காக முன்னைய செயலாளர்களுடன் கலந்துரையாடி பெற்றுக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமைய உத்தியோகத்தர்கள் பெயரிடப்படுகின்றனர். ஆரம்ப விசாரணைகளை நடாத்துவதற்குத் தகுதியுள்ள உத்தியோகத்தர்களைக் கண்டுபிடிப்பது கடினமாக இருப்பதுடன், சுயாதீன வெளியார் நிறுவனம் ஒன்றின் மூலம் அந்த ஆரம்ப விசாரணைகளைச் செய்வித்துக் கொள்வதற்கான தேவைப்பாடு இருப்பதாலும் ஆரம்ப விசாரணைகளுக்கான கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. சில நிறுவனங்கள் அரச நிர்வாகச் சுற்றறிக்கை 14/2014 ஐப் பின்பற்றி வந்தாலும், பெரும்பாலான நிறுவனங்கள் தாம் விதித்த அல்லது தீர்மானித்த கட்டணமொன்றை ஆரம்ப விசாரணைகளுக்காகச் செலுத்துகின்றன. குறித்த கொடுப்பனவுகளைத் தீர்மானிப்பது தொடர்பில் தலையிடும் வாய்ப்பு பொது நிருவாக அமைச்சுக்கு இல்லை. எதிர்காலத்தில் தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் XXX இற்கு அமைய அரசாங்கத்திற்கு ஏதேனும் சதவீதப் பணம் செலுத்தப்பட வேண்டுமா இல்லையா என்பது குறித்துத் தீர்மானிக்கப்படும் என்பதுடன், தற்போது இவ்வாறான நிறுவனங்களிடம் இருந்து சமர்ப்பிக்கப்படும்	உத்தியோகத்தர்களைப் பெயரிடும் போது, அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சட்டரீதியான கட்டணம் குறித்து அறிவிக்க வேண்டும். அந்தக் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய சம்பந்தப்பட்ட சேவையைப் பெறும் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

		கோரிக்கைகளுக்கான உத்தியோகத்தர்களைப் பெயரிடுவது இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதையும் தயவுடன் அறிவிக்கின்றேன்.	
(ஆ)	அமைச்சிற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட வகையில், 2013 திசெம்பர் 13 ஆம் திகதியன்று நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டிருந்த அங்கீகாரத்தின் அடிப்படையில், வருடாந்தப் பொருட்கள் மெய்மையாய்வினை நடாத்துவதற்காகப் பொருட்கள் மெய்மையாய்வு பணிக் குழுவுக்கு விசேட கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்ததுடன், அது 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 358,000, ரூபா 225,000 மற்றும் ரூபா 283,500 எனச் செலுத்தப்பட்டிருந்தது.	கடமை நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக வருடாந்தம் மேற்கொள்ளப்படும் பொருட்கள் மெய்மையாய்வுப் பணிகளுக்காக உத்தியோகத்தர்களுக்குத் நிறுவனப் பணிப்பாளர் நாயகத்தின் 2013 திசெம்பர் 13 ஆந் திகதிய அங்கீகாரத்திற்கு அமையக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.	பொருட்கள் மெய்மையாய்வுப் பணிகளுக்காகக் கொடுப்பனவுகளைச் செலுத்த திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். முறையான அங்கீகாரம் இல்லாத கொடுப்பனவுகள் சட்டபூர்வமற்ற கொடுப்பனவுகளாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	2022 நவம்பர் 28 ஆந் திகதி சனாதிபதி அலுவலகத்திடம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் சட்டபூர்வ உரிமை பொது நிர்வாகப் பிரிவின் வசமிருந்த பென்ஸ் வகை மோட்டார் வாகனம் ஒன்று, சாரதியால் தனிப்பட்ட தேவைக்காகக் கொழும்பிலிருந்து காலி மாவட்டச் செயலகத்திற்குச் செல்லும் போது, 2023 திசெம்பர் 19 ஆந் திகதி அதிவேகப் பாதையில் விபத்துக்குள்ளாகியிருந்தது. இந்த விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணங்களின்படி செயற்படாமல், கடமை நடவடிக்கையின்போது விபத்துக்குள்ளாகியதாகக் குறிப்பிட்டு, அமைச்சினால் விலைமனுக்களைக் கோராமல் சேவை வழங்குநர் ஒருவரைத் தெரிவுசெய்து, காப்புறுதி அடிப்படையில் விபத்து நடந்து 09 மாதங்களுக்குப் பின்னர் திருத்தப் பணிகளுக்காக ரூபா 13,000,000 செலுத்தப்பட்டிருந்தது.	திருத்தப் பணிகளை மேற்கொள்வது தொடர்பான காப்புறுதி உரிமங்களைப் பெறுவதற்காக, அந்தக் காலப்பகுதியில் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் மற்றும் காப்புறுதி செய்யப்பட்டவர் என்ற வகையில் இந்த அமைச்சினை தலையிடுமாறு சனாதிபதி அலுவலகத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கமைய, திருத்தப் பணிகளை மேற்கொள்வது மற்றும் காப்புறுதி உரிமங்களைப் பெற்றுக்கொள்வது இந்த அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதுடன், தற்காலிகப் பயன்பாடு காணப்பட்ட சனாதிபதி அலுவலகம் விபத்துத் தொடர்பில் நி.பி. 104 இற்கு அமையப் பரிசோதனையை மேற்கொள்ளுமாறு சனாதிபதி அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டது. சனாதிபதி அலுவலகத்தினால் நடாத்தப்பட்ட நி.பி. 104 பரிசோதனையின் அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை. வாகனத்தைத் திருத்துவது தொடர்பாகத் தொழில்நுட்ப பொறியியலாளரின் அறிவுறுத்தல்கள் மற்றும் முறையான அங்கீகாரத்துடன் விலைமனுக்களைக் கோரி, குறைந்த விலையைக் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டிற்காகத் தொழில்நுட்ப ஆலோசகரின்	நிதிப் பிரமாணங்களுக்கு அமையப் பரிசோதனைகள் நடாத்தப்பட்டு, அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நட்டம் ஏற்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட வேண்டும். வாகனத்தைத் திருத்துவது பெறுகைகள் நடைமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட்டு, வாகனத்தைச் ஓட்டத்தில் ஈடுபடுத்த வேண்டும்.

	பரிந்துரைகளுடன் திருத்தப் பணிகளை மேற்கொள்வதற்கு அமைச்சின் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் சனாதிபதி அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.	

3.6 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371 இற்கு அமைய, உரிய பணி நிறைவு செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணம் தீர்க்கப்பட வேண்டியபோதிலும், அரச நிர்வாகப் பிரிவினால் 13 சந்தர்ப்பங்களில் 12 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 883,700 உம், உள்நாட்டலுவல்கள் பிரிவினால் 14 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 457,740 உம் ஆகிய முற்பணங்களைத் தீர்ப்பதற்குப் பணி நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் 19 நாட்கள் முதல் 53 நாட்கள் வரையான காலம் எடுக்கப்பட்டிருந்தது. அத்துடன், அதில் ஒரு உத்தியோகத்தர் பெற்றுக்கொண்ட ரூபா 100,000 ஆனது பணிக்காகச் செலவிடப்படாமல் முழுமையாக மீதமிருந்ததுடன், அதனைத் தீர்ப்பதற்கு 15 நாட்கள் எடுக்கப்பட்டிருந்தது.	தற்போது இந்த அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமையால், கால தாமதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.	முற்பணங்களைப் பெறுவதிலும் தீர்ப்பதிலும் முறைகேடுகள் இருக்குமாயின், அதற்காக உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாதிரிப் பரிசோதனைகளின் பிரகாரம், 1993 செப்டம்பர் 21 ஆந் திகதிய 22/93 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு அமைய, கடமையின்போது காயமடையும் அரச உத்தியோகத்தர்களுக்கு நட்டஈடு பெற்றுக்கொள்வதற்காக நட்டஈட்டுச் சபைக்குச் சமர்ப்பித்து ஒரு தீர்மானத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 24 நட்டஈட்டுக் கோரிக்கை விண்ணப்பங்களில் 11 விண்ணப்பங்கள் அமைச்சுக்குக் கிடைத்த நாளிலிருந்து 119 - 1297 நாட்கள் வரையான காலம் கடந்திருந்தும் நட்டஈட்டுச் சபைக்குச் சமர்ப்பித்துத் தீர்மானமொன்றை வழங்கவில்லை. மேலும் 05 விண்ணப்பங்களை நட்டஈட்டுச் சபைக்குச் சமர்ப்பிப்பதற்கு 60 நாட்கள் முதல் 217 நாட்கள் வரையான காலமும், அந்த விண்ணப்பங்கள் அமைச்சுக்குக் கிடைத்த நாளிலிருந்து தீர்மானமொன்றை வழங்குவதற்காக 203 - 1008 நாட்கள் வரையான காலமும் கடந்திருந்தது. 08 நட்டஈட்டுக் கோரிக்கை விண்ணப்பங்களுக்கு வழங்கப்பட்ட நட்டஈட்டுச் சபை தீர்மானங்களைச் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிப்பதற்குத் தீர்மானம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 28 - 42 நாட்கள் வரையான காலம் எடுக்கப்பட்டிருந்தது.	நாள்தோறும் கிடைக்கப்பெறும் நட்டஈட்டுக் கடிதங்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாலும், உரிய துறைசார் கடமைகளை நிறைவேற்றப் போதுமான உத்தியோகத்தர்கள் இல்லாத காரணத்தினாலும், சம்பந்தப்பட்ட கோப்புக்கள் தொடர்பான பணிகளை விரைவாக முடிப்பதில் சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. அவ்வாறு இருப்பினும், சம்பந்தப்பட்ட கோப்புக்கள் தொடர்பாகப் பதிலளிக்கப்படாத நட்டஈட்டுக் கோரிக்கைகளுக்கு நினைவூட்டல் கடிதங்களை அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன். அவ்வாறு அனுப்பப்பட்ட நினைவூட்டல் கடிதங்களுக்குப் பதில்கள் தற்போது கிடைத்து வருகின்றன என்பதுடன், பூர்த்தி செய்யப்பட்ட இறுதி நட்டஈட்டுக் கோப்புக்கள் 45 இற்குத் தீர்மானங்களை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.	நட்டஈட்டுத் தீர்மானங்களைத் தாமதமின்றி வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

4.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
பொலன்னறுவை உத்தியோகபூர்வ வாசஸ்தலத் தொகுதி நிர்மாணிக்கப்படுவது தொடர்பாக 2020 ஆம் ஆண்டில் ரூபா 125,863,728 செலவிடப்பட்டிருந்த போதிலும், நிர்மாணப் பணிகளின் மேலதிக நடவடிக்கைகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்பதுடன், அந்தச் செலவு நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் நடைமுறை வேலைகளாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.	செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கான அமைச்சரவைத் தீர்மானம் 2025 செப்டம்பர் 08 ஆந் திகதி கிடைத்துள்ளது. அதற்கமைய, புதிய ஒப்பந்தக்காரர் ஒருவரைத் தெரிவுசெய்து திட்டத்தை மீண்டும் ஆரம்பித்து அனைத்துக் கட்டுமானப் பணிகளையும் பூர்த்தி செய்வதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.	உத்தியோகபூர்வ வாசஸ்தலத் தொகுதியின் நிர்மாணப் பணிகளை விரைவாக ஆரம்பித்து, எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும்.

4.3 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	யாழ்ப்பாணத்தில் அடைவாக்கி (Incubator) இற்காக ஒரு வர்த்தக நிலையத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மென்பொருள் முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்காக மூலதனச் செலவின விடயம் ஒன்றின் கீழ் வெளிநாட்டு நன்கொடைகள் மூலம் ரூபா 50,000,000 உம், வெளிநாட்டு நிதியிடல் செலவின விடயம் ஒன்றின் கீழ் ரூபா 15,000,000 உம் ஆகிய ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அவை உபயோகிக்கப்படவில்லை. இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் 04 வருடங்களுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்டிருந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் 2022 பெப்ரவரி 21 ஆந் திகதியுடன் நிறைவடைந்திருந்த போதிலும், செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.	2024 ஒக்தோபர் 28 ஆந் திகதிய அமைச்சின் பெறுகைகள் குழுவின் தீர்மானத்திற்கு அமைய, 2024 திசெம்பர் 12 ஆந் திகதியன்று திறைசேரிச் செயலாளரின் தலைமையில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின்போது, விடயப் பரப்புக்கு ஏற்ற பொருத்தமான அமைச்சு ஒன்றிடம் இந்தக் செயற்திட்டத்தைக் கையளிக்க இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தினால் உரிய ஏற்பாடுகளை நி.பி. 208 இற்கு அமைய பொருத்தமான அமைச்சு ஒன்றிடம் கையளிப்பதற்குச் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் இணக்கப்பாட்டின்படி நடவடிக்கை எடுக்குமாறு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு, இந்த அமைச்சுக்கும் பிரதிகள் உட்பட, அறிவிக்கப்பட்டுள்ளது.	இந்தத் செயறய்திட்டத்தைப் பொருத்தமான அமைச்சு ஒன்றிடம் கையளித்து நடைமுறைப்படுத்துவதற்கு மீண்டும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ளும் சாத்தியக்கூறு குறித்துக் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

(ஆ)	கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர்க் முகாமைத்துவ மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் கட்டம் 03 ஐ நடைமுறைப்படுத்துவதற்காக மீளாய்வாண்டில் மூலதனச் செலவின விடயம் ஒன்றின் கீழ் ஐரோப்பிய முதலீட்டு வங்கி கடன்கள் மூலம் ரூபா 3,000,000,000 உம், வெளிநாட்டு நிதியிடலின் கீழ் ரூபா 500,000,000 உம் ஆகிய ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் வெளிநாட்டு நிதியிடல் செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் ரூபா 18,256,008 மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. பெறுகைகள் நடவடிக்கைகள் முடிவடைந்து ஒப்பந்தங்களை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டமையால், கடந்த இரண்டு வருடங்களிலும் ஒதுக்கப்பட்டிருந்த மொத்த ஏற்பாடான ரூபா 1,977,034,807 முழுமையாக மீதமிருந்தது.	இந்தத் திட்டத்தை ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் (EIB) கடன் நிதியின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஐரோப்பிய முதலீட்டு வங்கியிடமிருந்து நிதி கிடைக்காததன் காரணமாக இந்த ஒதுக்கீட்டுத் தொகை மீதமடைந்துள்ளது.	நடைமுறை நிலைமைகளைக் கருத்திற் கொண்டு ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதிகள் மூலம் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைத் திட்டமிடப்பட்ட பணிகளுக்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	இலங்கை அரசாங்கமும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் இணைந்து நடைமுறைப்படுத்திய கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் பகுதி 03 ஐ நடைமுறைப்படுத்துவதற்காக மூலதனச் செலவின விடயம் ஒன்றின் கீழ் உள்நாட்டு நிதிகள் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த மொத்த ஏற்பாடான ரூபா 2,000,000,000 முழுமையாக மீதமிருந்தது.	2022 ஆம் ஆண்டில் ஒப்பந்தக்காரரால் நிதி கிடைக்கப்பெறாமையின் காரணமாக ஒப்பந்தத்தை நிறுத்தியுள்ளதுடன், அதனை மீண்டும் அதே ஒப்பந்தக்காரர் மூலம் நிறைவேற்றுவதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்று மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	நடைமுறை நிலைமைகளைக் கருத்திற் கொண்டு ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைத் திட்டமிட்ட பணிகளுக்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	அபிவிருத்தியடைந்துவரும் வலயங்களின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (JICA) கடனின் கீழ் ரூபா 2,000,000,000 உம், மேலதிக ஒதுக்கீட்டின் கீழ் மீள்செலுத்தக்கூடிய வெளிநாட்டுக் கடன் ரூபா 2,000,000,000 உம், வெளிநாட்டு நிதியிடல் செலவின விடயத்தின் கீழ் ரூபா 500,000,000 உம் என ரூபா 4,500,000,000 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 1,262,270,284 மட்டுமே	2022 ஜுன் மாதம் முதல் 2024 ஆகஸ்ட் மாதம் வரை JICA நிறுவனம் தனது நிதியை வழங்குவதை இடைநிறுத்தியதன் காரணமாகத் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் குறைந்திருந்தது. மேலும், அதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்குரிய மட்டுப்படுத்தப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் மாத்திரம் பரிசோதிக்கப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமையால் மட்டுப்படுத்தப்பட்ட தொகையே செலவிடப்பட்டது. அத்துடன், இதுவரை இரண்டு ஆலோசனை நிறுவனங்களின் ஆலோசகர்களை	நடைமுறை நிலைமைகளைக் கருத்திற் கொண்டு ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதிகள் மூலம் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைத் திட்டமிடப்பட்ட பணிகளுக்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	செலவிடப்பட்டமையால் ரூபா 3,237,729,716 அதாவது மொத்த ஒதுக்கீட்டில் 72 சதவீதம் மீதமிருந்தது.	ஆட்சேர்ப்புச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததால், சிவில் வேலைகளை ஆரம்பிக்க முடியவில்லை.	
(உ)	கிராமியப் பாலங்கள் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக ஐக்கிய இராச்சியத்தின் கடனின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 200,000,000 இற்கான ஏற்பாடு முழுமையாக மீதமிருந்தது. கடந்த ஆண்டிலும் இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த ஏற்பாடான ரூபா 200,000,000 முழுமையாக மீதமடைந்திருந்தது.	2024 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூபா 200,000,000 இற்கான ஏற்பாடு முழுமையாக மீதமடைந்தமைக்கு ஒப்பந்தக்காரரின் பிடிசாசினை விடுவிக்காதமையே காரணமாகும். ஒப்பந்தக்காரர் மூன்றாவது தரப்பினருடன் உடன்படிக்கை செய்துள்ளமையால், பிடிகாசினை விடுவிப்பதற்காகச் சட்ட ஆலோசனையைப் பெறுவதற்காகச் சட்டமா அதிபர் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதிலிருந்து வழங்கப்படும் தீர்மானத்திற்கு அமைய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	நடைமுறை நிலைமைகளைக் கருத்திற் கொண்டு ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், வெளிநாட்டு நிதிகள் மூலம் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைத் திட்டமிடப்பட்ட பணிகளுக்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.4 உள்நாட்டு நிதிகளின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	உள்ளூராட்சி நிறுவனங்கள் ஊடாகத் திடக் கழிவு முகாமைத்துவத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 150,000,000 இற்கான ஏற்பாடுகளில் ரூபா 125,766,145 அதாவது 84 வீதம் மீதமிருந்தது. வென்னப்புவ பிரதேச சபையால் சபை நிதியைப் பயன்படுத்தித் திட்டங்களை மேற்கொண்டமையாலும், ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களில் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தாதமையாலும் ஏற்பாடுகள் மீதமிருந்தன.	வென்னப்புவ பிரதேச சபையினால் 2021 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டு, பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட சேதனப் பசளை வளாகத்தை நிர்மாணிக்கும் பணிகளுக்காக அந்தச் சபை நிதியிலிருந்து ரூபா 32,629,754 செலவிடப்பட்டுள்ளது. சில திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது திட்டங்களின் செலவு மதிப்பீடு செய்யப்பட்ட தொகையை விடக் குறைந்துள்ளது. கொலொன்ன பிரதேச சபையின் மக்காத களஞ்சிய நிலையத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் பணிகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பொருத்தமான ஒப்பந்தக்காரர் ஒருவரைக் கண்டுபிடிப்பது கடினமாக இருந்தமை, அமைச்சரவை அங்கீகாரத்தின்படி செயற்படும்போது சில செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குப் போதுமான கால அவகாசம் இல்லாமை போன்ற விடயங்கள் காரணமாக ஒதுக்கீடுகள் மீதமடைந்தன.	நடைமுறை நிலைமைகளைக் கருத்திற் கொண்டு ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைத் திட்டமிடப்பட்ட பணிகளுக்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ)	உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்தும் அபிவிருத்தித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 600,000,000 இற்கான ஏற்பாடுகளில் ரூபா 390,444,692 இற்கான ஏற்பாடுகள் மீதமிருந்ததுடன், அதில் ரூபா 79,039,683 இற்கான ஏற்பாடுகள் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டுச் செலவிடப்பட்டிருந்தது.	ஆண்டின் இறுதியில் நிலவிய மோசமான காலநிலை காரணமாக நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்ய முடியாமையும், பாரிய அளவிலான நிர்மாணப் பணிகளுக்குப் போதியளவு கால அவகாசம் இல்லாமையும் காரணமாக 2024 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் மீதமடைந்தன.	நடைமுறை நிலைமைகளைக் கருத்திற் கொண்டு ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைத் திட்டமிடப்பட்ட பணிகளுக்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	“ஈ-கிராம உத்தியோகத்தர் செயற்திட்டம்” நடைமுறைப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,150,000,000 இற்கான ஏற்பாடுகளில் மீதமிருந்த 90 சதவீதமான அதாவது ரூபா 1,032,579,107 இற்கான ஏற்பாடுகளில் ரூபா 124,383,923 வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டுச் செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் முன்னோடி கட்டத்தின் கீழ் ரூபா 59,940,000 செலவில் 04 பிரதேச செயலகப் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் முழுமையாக செயலிழந்து காணப்படுகின்றன என்பதுடன், அதன் இரண்டாம் கட்டமாக 07 மாவட்டங்களில் 95 பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களுக்காக 2024 ஆம் ஆண்டு வரையில் ரூபா 355,436,458 செலவிடப்பட்டிருந்தபோதிலும், எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடையத் தவறியுள்ளது.	செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் மாவட்டங்களிலுள்ள கிராம அலுவலர்களுக்கு 2 in 1 வகை கணினிகளை வழங்குவது தொடர்பான கொடுப்பனவுகளில் ஏற்பட்ட தாமதங்கள் மற்றும் மென்பொருள் மேம்பாட்டுடன் தொடர்புடைய முதல் கொடுப்பனவில் இருந்து ஏற்பட்ட கொடுப்பனவு தாமதங்கள், அத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட கால அட்டவணைக்கு அமைய மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளை உறுதிப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதங்கள் போன்ற காரணங்களால் ஏற்பாடுகள் மீதமடைந்தன. செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட 07 மாவட்டங்களுக்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டாலும், கொள்கை ரீதியான தீர்மானங்களின் அடிப்படையிலும் அமைச்சு மட்ட கொள்வனவுக் குழுவின் தீர்மானத்தின்படியும், முதலில் களுத்துறை மாவட்டத்தில் திட்டத்தை நடைமுறைப்படுத்தி அதன் வெற்றியின் அடிப்படையில் ஏனைய மாவட்டங்களில் செயறதிட்டப் பணிகளை நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது.	நடைமுறை நிலைமைகளைக் கருத்திற் கொண்டு ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைத் திட்டமிடப்பட்ட பணிகளுக்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	உள்ளூராட்சிப் பிரதேசங்களில் சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,000,000,000 இற்கான மூலதன ஏற்பாடுகளில் ரூபா	இந்த செயற்திட்டத்தின் கீழ் ரூபா 685,200,000 இற்குரிய உப செயற்திட்டங்களை அங்கீகரித்து மாகாண மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்தன. ஆயினும், 2024 ஜூலை 26 ஆந் திகதி	நடைமுறை நிலைமைகளைக் கருத்திற் கொண்டு ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டும்

	150,000,000 இற்கான ஏற்பாடுகள் வேறு மூலதனச் செலவின விடயம் ஒன்றுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன், ரூபா 396,893,978 இற்கான ஏற்பாடுகள் மீதமிருந்தன. அதற்கமைய, மொத்த ஏற்பாட்டில் 55 சதவீதத்துக்கும் அதிகமாக நோக்கங்கொண்ட பணிகளுக்காகப் பயன்படுத்தப்படவில்லை.	அறிவிக்கப்பட்ட சனாதிபதித் தேர்தல் காரணமாக செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தடைகள் ஏற்பட்டமை, கொள்வனவுக்குப் போதுமான கால அவகாசம் இல்லாதிருத்தல் மற்றும் இறுதி ஐந்து மாதங்களில் நிலவிய அதிக மழைவீழ்ச்சி என்பன திட்டங்கள் தாமதமடையக் காரணமாக அமைந்தன.	என்பதுடன், ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைத் திட்டமிடப்பட்ட பணிகளுக்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(உ)	அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றுக்கு அமைய, அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான விடுதி மனைகள் மற்றும் சுற்றுலாப் விடுதிகளைச் சுற்றுலாத் துறைக்குப் பயன்படுத்தும் வகையில் உபயோகிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 600,000,000 இற்கான ஏற்பாடுகளில், அமைச்சின் கீழ் உள்ள 12 சுற்றுலாப் விடுதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 330,152,110 இற்கான ஏற்பாடுகளில் ரூபா 4,550,679 உம், வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான 09 சுற்றுலாப் விடுதிகளை அபிவிருத்தி செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் ரூபா 64,282,884 உம் மட்டுமே செலவிடப்பட்டமையால், மொத்த ஏற்பாட்டில் 89 சதவீதமான ரூபா 531,166,437 எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடைவதற்காகப் பயன்படுத்தப்படவில்லை.	இந்த ஏற்பாடுகள் தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நேரடி ஒதுக்கீடாகும். ஆரம்பத் திட்டமிடல் மற்றும் பெறுகைகள் செயல்முறை நிறைவடைந்து ஒப்பந்தத்தை வழங்குவது ஆண்டின் பிற்பகுதியில் இடம்பெற்றமையாலும், செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 2024 ஆம் ஆண்டில் 04 மாதங்கள் போன்ற மட்டுப்படுத்தப்பட்ட காலமே காணப்பட்டமையாலும், அந்தக் காலப்பகுதியில் அரச உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபட நேரிட்டமையாலும், அத்துடன் மழைக்கால காலநிலை காரணமாகவும் 2024 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.	நடைமுறை நிலைமைகளைக் கருத்திற் கொண்டு ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைத் திட்டமிடப்பட்ட பணிகளுக்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	**பிபிதெமு பொலன்னறுவை செயற்திட்டங்களின் முன்னேற்றம்**		
	(i) **புலத்திசி கல்விப் பீடத்தின் ஆசிரியர்கள் விடுதி** ரூபா 75,330,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட 72 அறைகளைக் கொண்ட ஆண்களுக்கான மூன்று மாடி விடுதிக் கட்டிடத்தின் 44 அறைகள் குடியிருப்பாளர்கள்	தற்போது 31 ஆண் ஆசிரியர்கள் கல்வி கற்பதற்காக இங்கே தங்கியுள்ளதுடன், 41 அறைகள் வெற்றிடமாகக் காணப்படுகின்றன. எதிர்காலத் திட்டங்களுக்கு அமைய இந்த கல்விப் பீடமானது உத்தேசிக்கப்பட்ட ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகமாக மாறும்	நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தை உகந்த மட்டத்தில் நோக்கங்கொண்ட பணிக்காகப் பயன்படுத்த வேண்டும்.

இன்றி 2019 ஆம் ஆண்டு முதல் செயலற்ற நிலையில் காணப்பட்டன.	போது, இந்தக் கட்டிடத்தை உகந்த பயன்பாட்டிற்குக் கொண்டுவர முடியும்.	
(ii) **அத்தனக்கடவல மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூட நிர்மாணம்**		
2019 ஆம் ஆண்டில் ரூபா 18,200,000 மதிப்பீட்டுப் பெறுமதியின் கீழ் ரூபா 27,050,000 செலவில் கேட்போர் கூடம் நிர்மாணிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டிருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டு முடிவடையும் வரை கேட்போர் கூடமாகப் பயன்படுத்தப்படவில்லை.	கேட்போர் கூடம் பூர்த்தியடைவதற்குத் திரைச்சீலைகள், ஒலிபெருக்கி அமைப்பு, மேடை விளக்கு அமைப்பு மற்றும் ஏனைய உபகரணங்களின் தேவைப்பாடு உள்ளது. இருப்பினும், தற்போதுள்ள சூழ்நிலையின் கீழ் அது பயன்படுத்தப்பட்டு வருகின்றது.	ஏனைய உபகரணத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டு, கேட்போர் கூடத்தை விரைவாகப் பயன்படுத்த வேண்டும்.
(iii) **பஹல எல்லேவெவ மெத்குசும் கம கிராமத்துக்கான நீர்த் தாங்கி நிர்மாணம்**		
2018 ஆம் ஆண்டில் ரூபா 2,320,196 மதிப்பீட்டுப் பெறுமதியின் கீழ் மெத்குசும் கம கிராமத்துக்காக 40,000 லீட்டர் நீர்த் தாங்கி ஒன்றைக் நிர்மாணிப்பதற்காக ரூபா 866,848 செலவில் கொங்கிறீட் தூண்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர், கட்டுமானப் பணிகள் இடையில் நிறுத்தப்பட்டிருந்தன.	இந்த நீர்த் தாங்கி நிர்மாணிக்கப்பட்டுப் பல வருடங்கள் கடந்திருப்பதால், தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள பகுதியின் கொங்கிறீட் நிலைமை குறித்துப் பரிசோதித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாவட்டப் பொறியியலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது உரிய திட்டத்திற்காக ஒதுக்கீடுகள் இல்லாததால், நிதி மூலம் ஒன்று கிடைத்தவுடன் சம்பந்தப்பட்ட பணிகளைப் பயனுள்ள வகையில் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆரம்பிக்கப்பட்ட பணியின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொண்டு, தேவையான பணிகளை மேற்கொள்ள வேண்டும்.
(iv) **கதுருவெல புகையிரத உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம்**		
கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட புகையிரத உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு அருகில் வர்த்தக நடவடிக்கைகளுக்காக	இந்த வர்த்தகக் கட்டிடம் 2023 திசெம்பர் 30 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் இலங்கை புகையிரத திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டிடத்திற்காகச் சூரிய மின்சக்தி முறைமை ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அது 2024 ஒக்டோபர் 24 ஆந் திகதி	செயலற்றுக் காணப்படும் கட்டிடத்தை நோக்கங்கொண்ட பணிகளுக்காகப் பயன்படுத்துவதற்கு புகையிரதத்

	நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடம் 2021 ஆம் ஆண்டு முதல் எந்தவொரு பயன்பாட்டிற்கும் உட்படுத்தப்படாமல் செயலற்ற நிலையில் காணப்பட்டது. பயன்படுத்தப்படாமையின் காரணமாக மின்தூக்கியும் செயலிழந்திருந்ததுடன், கட்டிடத்திற்காக நியமிக்கப்பட்டிருந்த இரண்டு காவலர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளமும் பயனற்றதாக இருந்தது.	இலங்கை ரயில்வே திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இனிமேல் அதன் முகாமைத்துவம் தொடர்பான தீர்மானங்கள் இலங்கை புகையிரதத் திணைக்களத்தினால் எடுக்கப்படும். .	திணைக்களம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 செப்டம்பர் 27 ஆந் திகதியன்று அமைச்சின் பொது நிர்வாகப் பிரிவின் பயன்பாட்டில் இல்லாத மற்றும் புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் கோப்புக்கள் மூலம் தகவல்களை உறுதிப்படுத்த முடியாத 80 வாகனங்கள் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தன. கொம்ப்ரோலர் நாயகம் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி, அதில் 50 வாகனங்கள் அவற்றைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு முறையாகக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன், எஞ்சிய 30 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் காணப்படவில்லை.	தற்போது அமைச்சு பயன்படுத்தாத, ஆனால் பதிவில் உள்ள 80 வாகனங்களில் 61 தொடர்பான தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், எஞ்சிய வாகனங்களின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக மாகாண சபைப் பிரிவு மற்றும் மாவட்டச் செயலகங்களிடம் இருந்து எழுத்துமூலம் தகவல்கள் கோரப்பட்டுள்ளது.	ஏனைய நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்ட வாகனங்களின் உரிமை மாற்றப்பட வேண்டும்.
(ஆ)	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பெயரில் பதிவுசெய்யப்பட்டிருந்த 76 வாகனங்களின் பதிவுச் சான்றிதழ்கள் அமைச்சின் வசம் இருக்கவில்லை என்பதுடன், அதில் 27 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் இருக்கவில்லை. மேலும், 44 பதிவுசெய்யப்பட்ட வாகனங்கள் உள்ளூராட்சி நிறுவனங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக	27 வாகனங்களில் 8 வாகனங்கள் தொடர்பான தகவல்களைத் தற்போது அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அடையாளம் காணப்படாத எஞ்சிய 19 வாகனங்கள் தொடர்பில் தற்போது தகவல்கள் தேடப்பட்டு வருகின்றன. ஏனைய வாகனங்கள் வழங்கப்பட்ட நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள் அமைச்சின் வசம் இருப்பதுடன், அந்த	வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களைப் பயன்படுத்தும்போது, அந்த வாகனங்களைக் கையளிப்பதற்கும் கையகப்படுத்துவதற்கும் நடவடிக்கை

	ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், 18 வாகனங்களின் கையளிக்கப்பட்ட திகதி மற்றும் விபரங்கள் மாத்திரமே காணப்பட்டன. மேலும் 02 வாகனங்கள் போரில் அழிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான தகவல்கள் காணப்படவில்லை. அத்துடன், உள்நாட்டலுவல்கள் பிரிவானது வேறு திணைக்களங்களுக்குச் சொந்தமான நான்கு வாகனங்களைப் பயன்படுத்தி வந்தபோதிலும், அவற்றைத் தம்வசம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை.	வாகனங்கள் தொடர்பான பதிவுச் சான்றிதழ்கள் காணாமல் போதல், வருடாந்த வருமான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாமை போன்ற காரணங்களால் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளன. வாகனங்களை உள்நாட்டலுவல்கள் அமைச்சிடம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	எடுக்க வேண்டும்.
(இ)	2010 ஆம் ஆண்டில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்குக் கொண்டுவரப்பட்ட, சனாதிபதி அலுவலகத்தின் பெயரில் பதிவுசெய்யப்பட்டிருந்த குண்டு துளைக்காத வாகனம் ஒன்று திருத்தப் பணிகளுக்காக 2014 ஆம் ஆண்டில் முகவர் நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது. திருத்தப் பணிகளுக்கான ரூபா 3,237,079 இற்கான பற்றுச்சீட்டைச் செலுத்தி வாகனத்தை விடுவித்துக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், நடவடிக்கை எடுக்காததன் காரணமாக வாகனம் பயன்படுத்த முடியாத நிலையில் முகவர் நிறுவனத்திற்குச் சொந்தமான காணி ஒன்றில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.	KB-9228 இலக்க குண்டு துளைக்காத வாகனம் அப்போதைய அமைச்சர் மற்றும் செயலாளரின் பணிப்புரைகள் மற்றும் அங்கீகாரங்களுக்கு அமைய முகவர் நிறுவனத்திடம் அனுப்பி மதிப்பீடுகளைப் பெற்று மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருத்தப் பணிகளுக்கான ஒதுக்கீடுகளைப் பெறுவதற்குச் சனாதிபதி அலுவலகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சனாதிபதி அலுவலகத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.	சனாதிபதி அலுவலகத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய மேலதிக நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஈ)	அரச நிர்வாகப் பிரிவுக்குச் சொந்தமான 07 விடுதி மனைகளுக்கும், உள்நாட்டலுவல்கள் பிரிவுக்குச் சொந்தமான 35 சுற்றுலாப் விடுதிகளுக்கும் உரிய காணி உரிமைகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படவில்லை.	காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.	சம்பந்தப்பட்ட காணிகளை கையகப்படுத்துவதற்குத் தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(உ)	நில மெதுரெய் கட்டிடத்தின் வெளிப்புறத்தில் பொருத்தப்பட்டுள்ள Cladding மற்றும் கண்ணாடிகளைச் சுத்திகரிக்கும் நோக்கத்துடன் 2021 ஆம் ஆண்டில் ரூபா 31,050,000 பெறுமதியான 02 கோண்டோலா	Dimo நிறுவனம் மூலம் 21 ஆவது மாடியில் நிறுவப்பட்டுள்ள கோண்டோலா இயந்திரம் திருத்தப்பட்டு வருகின்றதுடன், 20 ஆவது மாடியில் நிறுவப்பட்டுள்ள திருத்தப்பட்ட இயந்திரம் உரிய செயல்பாட்டில் இருப்பதாக அரச	கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களை அவசியமான தேவைக்காகப் பயன்படுத்த

இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தபோதிலும், தற்போது வரையில் அவை பயன்படுத்தப்படவில்லை.	அங்கீகாரம் பெற்ற பரிசோதகப் பொறியியலாளர் ஒருவரின் சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.	வேண்டும்.

4.6 முகாமைத்துவ நலிவுகள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2022 திசெம்பர் 14 ஆந் திகதிய 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை விதிகள் கொண்ட XVIII அத்தியாயத்தின் பந்தி 247 இல் உள்ள நோக்கங்கள் நிறைவேறும் விதத்தில் ஒருங்கிணைந்த மற்றும் நாடளாவிய சேவை உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதுடன், கட்டாய இடமாற்றங்களுக்கு உட்பட்ட உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றக் கொள்கை முறையாக அமுல்படுத்தப்படவில்லை.		
(i) ஒரே சேவை நிலையத்தில் 06 வருடங்களுக்கு மேலான சேவைக் காலத்தைக் கொண்ட இலங்கை நிர்வாகச் சேவை, இலங்கை கணக்காளர் சேவை மற்றும் இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து இடமாற்றங்களுக்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் முறையே 222, 275 மற்றும் 75 உத்தியோகத்தர்கள் மாத்திரமேயாவர். இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டவர்கள் 80, 91 மற்றும் 32 உத்தியோகத்தர்கள் மாத்திரமேயாவர்.	வருடாந்த இடமாற்றங்களுக்கு விண்ணப்பித்திருந்தாலும், பதிலீட்டு உத்தியோகத்தர் ஒருவரை வழங்க முடியாமையும், தற்போதைய சேவை நிலையத்தில் நிர்ணயிக்கப்பட்ட சேவைக் காலத்தை (குறைந்தது 03 வருடங்கள்) பூர்த்தி செய்யாமையும், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பதவியொன்றில் சேவை செய்யும் போது இடமாற்றங்களை இணக்கப்படுத்துவதற்கு இடமாற்றச் சபையால் முடியாமையும் இதற்குக் காரணமாக உள்ளது. வருடாந்த இடமாற்றங்களின்போது கூட உத்தியோகத்தர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் மாத்திரம் இடமாற்றங்களைச் செய்யும் சாத்தியக்கூறு இல்லை எனவும் தெரிவித்துக்கொள்கின்றேன்.	நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றக் கூடிய வகையிலும், நீண்ட காலமாக ஒரே கடமை நிலையத்தில் தங்கியிருப்பதற்கான வாய்ப்பைத் தவிர்த்தும் இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

(ii)	2024 திசெம்பர் 31 ஆந் திகதியன்று, கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 07 ஒருங்கிணைந்த சேவைகளுக்குச் சொந்தமான 45,966 உத்தியோகத்தர்களில் 05 வருடங்களுக்கு மேல் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றிய 16,531 உத்தியோகத்தர்கள் 2025 ஆம் ஆண்டில் இடமாற்றங்களுக்காக விண்ணப்பித்திருந்தாலும், அவர்களில் 5,069 பேருக்கு மாத்திரம் இடமாற்ற உத்தரவுகள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், அமைச்சில் சேவையாற்றும் 157 ஒருங்கிணைந்த சேவை உத்தியோகத்தர்கள் 05 - 10 வருடங்கள் வரையான காலப்பகுதியிலும், மேலும் 44 உத்தியோகத்தர்கள் 10 - 31 வருடங்கள் வரையான காலப்பகுதியிலும் இடமாற்றம் பெறாமல் தொடர்ச்சியாக ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றுகின்றனர்.	07 சேவைகளைக் கொண்ட ஒருங்கிணைந்த சேவையின் வருடாந்த இடமாற்றச் செயல்முறையானது மிகவும் சிக்கலான ஒரு செயல்முறையாகும் என்பதுடன், ஒவ்வொரு சேவைக்கும் உரிய உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் தொடர்பிலும் தனித்தனியாகக் கவனம் செலுத்தி இந்தச் செயல்முறை மேற்கொள்ளப்படுகின்றது. ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களையும் இடமாற்றம் செய்வது நடைமுறையில் கடினம் என்பதை நான் அவதானிக்கிறேன். இங்கே கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயம் யாதெனில், அரச சேவையின் விசேடமாக PL இலிருந்து MN-4 வரையான சம்பளக் கட்டமைப்பைப் பெற்ற உத்தியோகத்தர்களில் பெரும்பான்மையானவர்கள் ஒருங்கிணைந்த சேவைகளின் கீழ் வருபவர்கள் ஆவர். அவர்களது கடமைகளின் விடயப் பரப்பு, அத்துடன் அந்த உத்தியோகத்தர்கள் சேவை நிலையங்களை அடைவதற்கான போக்குவரத்து வசதிகள் ஆகியனவற்றைச் சேவை நிலையத்தில் அவர்களை நிலைப்படுத்தும் போது முடிந்தவரை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.	நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றக் கூடிய வகையிலும், நீண்ட காலமாக ஒரே கடமை நிலையத்தில் தங்கியிருப்பதற்கான வாய்ப்பைத் தவிர்த்தும் இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	ஒருங்கிணைந்த சேவைக்குச் சொந்தமான 07 சேவைகளின் உத்தியோகத்தர்களின் நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்களுக்கான அதிகாரம் ஒருங்கிணைந்த சேவைப் பணிப்பாளர் நாயகத்திடம் இருந்தபோதிலும், 2024 திசெம்பர் 31 ஆந் திகதியன்று காணப்பட்ட 130,989 உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி	அமைச்சின் கீழ் இருந்த அரச சேவைப் பயிற்சி நிறுவனத்தின் பணி இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தாலும், அந்த நிறுவனத்தில் பதவிநிலைத்தரமற்ற உத்தியோகத்தர்களுக்கான பயிற்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்குத் தேவையான வசதிகள் போதியளவில்	ஒருங்கிணைந்த சேவைக்குச் சொந்தமான அனைத்துச் சேவை உத்தியோகத்தர்களுக்கும் முறையான திட்டமொன்றின் கீழ் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

	அளிப்பது தொடர்பாகத் திட்டமிடப்பட்ட முறையாக ஒரு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அமைச்சின் கீழ் இருந்த அரச சேவைப் பயிற்சி நிறுவனம் மூடப்பட்டதன் பின்னர், அந்தக் கடமை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தபோதிலும், அமைச்சோ அல்லது அந்த நிறுவனமோ இந்த உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் கவனம் செலுத்தவில்லை.	இல்லாதமையால், அந்தக் கடமை முறையாக இடம்பெறவில்லை. தற்போது அரச சேவைப் பயிற்சி நிறுவனத்தை மீண்டும் நிறுவுவதற்காகத் தயாரிக்கப்பட்ட முன்மொழிவுக்கு முறையான அங்கீகாரம் கிடைத்தவுடன், அந்த நிறுவனம் மீண்டும் நிறுவப்பட்டு, அதன் மூலம் பதவிநிலைத்தரமற்ற அனைத்து ஒருங்கிணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான பயிற்ச்சித் திட்டங்களை மேலும் பரந்தளவில் ஒழுங்குபடுத்தி நடாத்திச் செல்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.	
(இ)	மேல் மாகாண விளையாட்டு அமைச்சின் கீழ் 2008 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட, அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களை உறுப்பினர்களாகக் கொண்ட வ/ப இலங்கை அரச சேவை விளையாட்டுக் கழகம் அமைச்சிற்குச் சொந்தமான கட்டிடமொன்றில் நடாத்தப்பட்டு வருகின்றது. அதன் சட்டவிதிகளுக்கு அமைய அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அரச ஊழியர்கள் தொடர்பில் அமைச்சுக்கு உள்ள பொறுப்புகளின் பிரகாரம், இந்தக் கழகம் அரச நிர்வாக விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டிய போதிலும், தற்போது இந்த விளையாட்டுக் கழகம் அமைச்சின் கட்டுப்பாட்டிற்கு வெளியே செயற்பட்டு வருகின்றது. 2009 ஆம் ஆண்டில் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த பொல்ஹேன்கொடவில் அமைந்துள்ள 0.2437 ஹெக்டேயர் காணியானது, ஒப்படைப்புக் கட்டளைகளுக்கு முரணாக 2010 ஆம் ஆண்டில் விளையாட்டுக் கழகத்தின் நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக எழுத்துமூலம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்படைத்து 14 வருடங்களுக்கு மேலாகக் கடந்துவிட்டபோதிலும், காணி மற்றும் கட்டிடங்களின் உரிமை, இருப்பு மற்றும் பாதுகாப்புத் தொடர்பில் நடவடிக்கையொன்று எடுக்கப்படாமை, காணியை மதிப்பீடு செய்து கணக்கு	2018 ஆம் ஆண்டில் இந்த அமைச்சுக்குச் சொந்தமான பொல்ஹேன்கொடவில் அமைந்துள்ள 0.2437 ஹெக்டேயர் காணியானது வ/ப இலங்கை அரச சேவை விளையாட்டுக் கழகத்தை நடாத்திச் செல்வதற்காக உரிய அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டுள்ளது. கழகத்தில் நிலவும் சர்ச்சைக்குரிய நிலைமைகள் குறித்து தற்போது அமைச்சிற்கு அறிக்கை செய்யப்பட்டுள்ளது. இந்தக் குழப்பம் தொடர்பாகப் பரிசோதிப்பதற்காக தற்போது ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன், உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட நிறுவனங்களுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அந்தக் தகவல்கள் கிடைத்த பின்னர் குழு மீண்டும் கூடவுள்ளதுடன், அப்போது குழுவினால் சமர்ப்பிக்கப்படும் முன்மொழிவுகள் மற்றும் குழுவின் தீர்மானங்களுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.	விளையாட்டுக் கழகம் அமைந்துள்ள அமைச்சிற்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் உரிமை, இருப்பு மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், விளையாட்டுக் கழகத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அமைச்சு தலையிட்டுச் செயற்பட வேண்டும்.

	வைக்காமை மற்றும் அண்மைய குடியிருப்பாளர்களின் அத்துமீறிய ஆக்கிரமிப்பு என்பனவும் அவதானிக்கப்பட்டன.		
(ஈ)	24 அறைகளைக் கொண்ட அமைச்சிற்குச் சொந்தமான யாழ்ப்பாண விடுதி மனை, பொலிஸ் உத்தியோகத்தர்களைத் தனிமைப்படுத்தும் நிலையமாகப் பயன்படுத்துவதற்காக, யாழ்ப்பாணப் பொலிஸ் அத்தியட்சகரின் கோரிக்கைக்கு அமைய, எந்தவொரு சட்டரீதியான இணக்கப்பாடும் இன்றி 2020 ஆம் ஆண்டில் ஒரு வருட காலப்பகுதிக்கு வழங்கப்பட்டிருந்தது. கையளித்து 05 மாதங்களின் பின்னர் விடுதி மனைக்கு ஏற்பட்டிருந்த சேதங்கள் காரணமாக, அனைத்துத் திருத்தப் பணிகளையும் மேற்கொண்டு மீண்டும் உரிய நிலைக்குக் கொண்டு வந்து கையளிக்குமாறு யாழ்ப்பாணப் பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் மா அதிபர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருக்குப் பல சந்தர்ப்பங்களில் அமைச்சினால் அறிவிக்கப்பட்ட போதிலும், விடுதி மனை திருத்தப்படவில்லை. சேதம் ஏற்பட்டு 1 1/2 வருடங்களின் பின்னரும் 03 வருடங்களின் பின்னரும் திருத்தப் பணிகளுக்காக முறையே ரூபா 1,738,000 மற்றும் ரூபா 8,775,000 செலவாகும் என மதிப்பிடுவது மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த விடுதி மனையிலிருந்து 2016-2019 காலப்பகுதியில் ரூபா 11,734,000 வருமானம் ஈட்டப்பட்டிருந்த போதிலும், அதன் பின்னர் மீளாய்வாண்டு வரை 04 வருடங்களுக்கு மேலான காலப்பகுதியில் எந்தவொரு வருமானத்தையும் ஈட்ட முடியவில்லை. அவ்வாறிருந்தும், ஊழியர் சம்பளம், நீர்க் கட்டணம் மற்றும் மின் கட்டணம் செலுத்துவதற்காக மாத்திரம் ரூபா 7,931,039 செலவிடப்பட்டிருந்தது. அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றுக்கு அமைய அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான விடுதி மனைகள் மற்றும் சுற்றுலாப் விடுதிகளை அதி உச்சப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ்	2023 நவம்பர் 14 ஆந் திகதிய 23/நானாவித ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு அமைய, அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான விடுதி மனைகள் மற்றும் விடுதிகளை அதி உச்சப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்காக ரூபா 600,000,000 இற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமையால், அந்த ஏற்பாடுகளின் கீழ் யாழ்ப்பாணம் விடுதி மனையின் திருத்தங்கள் மற்றும் அபிவிருத்திக்காக 2024 ஆம் ஆண்டில் அங்கீகாரம் பெறப்பட்டதுடன், அதற்காக வட மாகாணக் கட்டிடங்கள் திணைக்களத்திடம் இருந்து மதிப்பீடுகள் கோரப்பட்டன. இறுதியாகத் திருத்தப்பட்ட மதிப்பீடு இந்த அமைச்சிற்குக் கிடைத்தது 2024 ஆகஸ்ட் 20 ஆந் திகதியாகும். அந்த மதிப்பீட்டிற்கு அமைய ரூபா 40,000,000 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு பெறுகைகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், திருத்தப் பணிகளுக்காக ஒப்பந்தக்காரர் ஒருவர் முன்வராதமையாலும், சனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றமையாலும், இந்த பணியுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து கிடைத்த ஒத்துழைப்பும் மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்தமையால், இந்தத் திருத்தப் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை.	தாமதமின்றி விடுதி மனையின் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

	மீளாய்வாண்டில் இதற்காக ரூபா 40,000,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும், அவை பயன்படுத்தப்படவில்லை.		
(உ)	ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கான அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச தனிப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை 06 ஆக இருந்தபோதிலும், 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான 1231 தனிப்பட்ட அலுவலர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்காகச் செலவிடப்பட்ட ரூபா 508,015,904 இல் ரூபா 11,741,387 ஆனது 85 பாராளுமன்ற உறுப்பினர்களின் 142 தனிப்பட்ட அலுவலர்களுக்கு நியமனத் திகதிக்கும் கடமையை ஏற்றுக்கொண்ட திகதிக்கும் இடையிலான காலப்பகுதிக்கான நிலுவைச் சம்பளமாகச் செலவிடப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தர்கள் சம்பளத்தைப் பெற்றுக்கொண்ட போதிலும், அதற்காக நி. பி. 238(5) இற்கு அமையச் சம்பளப் பட்டியல்களில் கையொப்பமிடாதிருந்துடன், தொடர்ச்சியாக அவர்களது தனிப்பட்ட வங்கிக் கணக்குகளுக்குச் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது	நி. பி. 238(5) இற்கு அமையச் சம்பளப் பட்டியல்களில் கையொப்பமிடாதது தொடர்பாக அப்போதைய பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தல்களின் பேரில், பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணியை நியமிப்பது மற்றும் நியமனங்களை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பான நடைமுறை ஒழுங்கொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இனிமேல் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நியமனத் திகதிக்கும் கடமையை ஏற்றுக்கொண்ட திகதிக்கும் இடையிலான காலப்பகுதிக்காகச் செய்யப்பட்ட கொடுப்பனவுகளை அறவிட வேண்டும்.
(ஊ)	1970 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அமைச்சினால் வெளியிடப்பட்ட 1324 அரச நிர்வாகச் சுற்றறிக்கைகளும், அத்துடன் 1979-2014 காலப்பகுதியில் இரத்துச் செய்யப்பட்ட 19 சுற்றறிக்கைகளும் அமைச்சின் இணையத்தளத்தில் காணப்படுகின்றன. குறித்த சுற்றறிக்கைகளை இற்றைப்படுத்தி, சுற்றறிக்கைகளின் செல்லுபடியாகும் தன்மை தொடர்பில் பயனாளர்களுக்கு உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.	1970 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரையான சுற்றறிக்கைகளை ஒவ்வொன்றாகப் பரிசோதித்து, இரத்துச் செய்யப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட சுற்றறிக்கைகளை அடையாளம் காணும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவ்வாறு அடையாளம் காணப்பட்ட சுற்றறிக்கைகளுக்காக மென்பொருள் ஒன்றின் உதவியுடன் இணைப்புகளை உள்ளடக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்தக் கடமை நிறைவடைந்தவுடன், உரிய சுற்றறிக்கைகளை அமைச்சின் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்வதற்காகத் தகவல் பிரிவிடம் கையளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.	அமைச்சின் இணையத்தளத்தில் உள்ள சுற்றறிக்கைகளை இற்றைப்படுத்திப் பேணுவதற்குத் தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

5. மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
தாபனவிதிக் கோவையின் II அத்தியாயத்தில் 13.3 ஆம் பிரிவிக்கமைய, நிரந்தர நியமனமொன்று வழங்கப்பட வேண்டிய சந்தர்ப்பத்தில் தற்காலிகத் தீர்வாக மாத்திரமே பதவிகளுக்குப் பதிற்கடமை நியமனங்கள் செய்யப்பட வேண்டும். அவ்வாறிருந்தும், வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்காகவும், சேவைக்குச் சமூகமளிக்காத உத்தியோகத்தர்களின் பணிகளை நிறைவேற்றுவதற்காகவும் பதிற்கடமை அடிப்படையில் 2023-2024 ஆம் ஆண்டுகளில் நியமிக்கப்பட்ட 19 நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்களுக்கும் 46 நிறைவேற்றுத்தரம் அல்லாத முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கும் பதிற்கடமை கொடுப்பனவுகளாக ரூபா 4,748,892 செலுத்தப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தர்கள் இரண்டு பதவிகளினதும் முழுமையான கடமைகளையும் நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருந்தனர்.	உரிய காலப்பகுதியில் சில பதவிகளுக்குப் புதிய ஆட்சேர்ப்புகள் இடம்பெறாமை, அந்தப் பதவிகளில் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள், ஓய்வுபெறுதல் போன்ற காரணங்களால் ஏற்பட்ட வெற்றிடங்கள் காரணமாக, சம்பந்தப்பட்ட பிரிவுகளின் தலைவர்களின் கோரிக்கைகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில், நியமன அதிகாரம் கொண்டவரின் முறையான அங்கீகாரத்தின் பேரில், பதிற்கடமைகளுக்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.	தற்காலிக வெற்றிடங்களுக்காகப் பொறுப்பாகச் பதிற்கடமை நியமனங்களை வழங்குவது நிறுத்தப்பட வேண்டும்.